# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2065 - 2018 මාර්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.03.29

*2065 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 642 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 649 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.–** தேசிய கணக்காய்வு சட்டமூலம் 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஹெலிஸ்போட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 130051
*பதிவு முகவரி :* இல. 7/10, 1 ஆவது லேன், கல்பொத்த வீதி ஊடாக, நாவல
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018.02.12.

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1089*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* வின்ட் பிளன்ட் கைட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 129726
*பதிவு முகவரி :* இல. 47, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018.02.12.

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1090*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஃபிரஸ்னஸ் மெடிக்கல் கெயார் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 130084
*பதிவு முகவரி :* இல. 47, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018.02.22.

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1091*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* அம்பாந்தோட்ட ஃபோர்ட் அன்ட் லொஜிஸ்டிக்ஸ் சேர்விசஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 130214
*பதிவு முகவரி :* இல. 63/1, வோட் பிளேஸ், கொழும்பு - 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018.02.26

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1092*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* மூவ் இட் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 130243
*பதிவு முகவரி :* இல. 47, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு - 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2018.02.27

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1093*

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஏ டி எம் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 126182
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017.10.19

*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 47/15/ஏ, வெரலுகொல்ல வத்த, வட்டட்டர, வெயாங் கொடை

எச். ஏ. அனுஷ் ஹேமந்த ஹெடிங்கபொல,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 47/15/ஏ,
வெரலுகொல்லவத்த,வட்டட்டர,
வெயாங்கொடை.

*3- 1127*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* க்ரூம் ஸ்டார் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் : பீவீ 129575*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.06*
*பதிவு முகவரி :* இல. 193/39, பண்டாரநாயக்கபுர, மத்தேகொட

லிவிக் கோப்பரேட் ஐ
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

*3- 1145*

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கம்பனியாக்கப்பட்டுள்ளது.-

*கம்பனியின் பெயர் :* ஹரி ரியல் எஸ்டேட் ஏஜன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இல. : பீவீ 130114*
*பதிவுத் திகதி :* 2018, பெப்புருவரி 22
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

கம்பனிச் செயலாளர்கள்.

*3- 1177*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :*டெக்லெப்ஸ் குளோபல் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல. : பீவீ 130096*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.22*
*பதிவு முகவரி :* இல.9பி, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு - 7

சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
பணிப்பாளர்.

*3- 1178*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* எமரல்ட் கம்பியுடர் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல. : பீவீ 16697*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.04*
*பதிவு முகவரி :* இல. 259, பியகம வீதி, பேலியகொடை

பணிப்பாளர்.

*3- 1179*

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர் :* அகரம் பவுன்டேஷன் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல. : பீவீ 130225*
*கம்பனியின் முகவரி :* இல. 291/15-1/2, எட்வார்ட் எவனியூ, ஒப் ஹெவ்லொக் வீதி, கொழும்பு 6

செல்வி சாரா ஜோர்ஜ்,
கம்பனிச் செயலாளர்.

*3- 1197*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2011.04.12 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* D அன்ட் T லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல.:* பீவீ 78341
*பதிவு முகவரி :* இல. 142/1B, பரகந்தனிய, இம்புல்கொட

கம்பனிச் செயலாளர்கள்.

3-1180

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஈடுடீ சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல.:* பீவீ 110670
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2015.12.21
*பதிவு முகவரி :* இல. 805/5, தலங்கம வடக்கு, மாலபே

கம்பனிச் செயலாளர்கள்.

3-1198

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* டிரேட் கோப் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இல.:* பீவீ 92787
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2013.05.30
*பதிவு முகவரி :* இல. 89/18சீ, டிசீ வத்த வீதி, பத்தரமுல்ல

கம்பனிச் செயலாளர்கள்.

3-1199

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஸ்கைவேர்த் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல.:* பீவீ 122128
*பதிவு அலுவலகம் :* 60/1/3, மொறட்டுவ வீதி, பிலியந்தலை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017.05.08

கம்பனிச் செயலாளர்.

3-1231

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழ் , கலைப்பலுவலராக நியமித்தல் பற்றிய அறிவிப்பு.

உப கூட்டுச்சங்கம் ( பிறைவேட்) லிமிட்டட்

## கம்பனி பதிவு இலக்கம் பிவீ 5775 தன்னார்வ உறுப்பினர்கள் இணைப்பு

*கம்பனியின் பெயர் :* உப நிறுவனங்களின் கூட்டுச் சங்கம் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :*34, வாட் பிளேஸ், கொழும்பு 7
*கலைப்பலுவலரின் பெயர் :* திரு. உதித்த ப்ரியங்க எகலாஹெவ
*முகவரி :* 288, ராஜகிரிய வீதி, ராஜகிரிய
*நியமனம் :* கம்பனி உறுப்பினர்கள் மூலம்
*நியமிக்கப்பட்ட திகதி :* 2018, மாச்சு 13

உதித்த ப்ரியங்க எகலாஹெவ
சனாதிபதி ஆலோசக கலைப்பலுவலர்.

இல. 288,
ராஜகிரிய வீதி,
ராஜகிரிய.

3-1246/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் கீழ் நிபந்தனைகள் பற்றிய அறிவிப்பு
## உப கூட்டுச்சங்கம் ( பிறைவேட்) லிமிட்டட் கம்பனி பதிவு இலக்கம் பிவீ 5775 தன்னார்வ உறுப்பினர்கள் இணைப்பு

இத்தால் அறிவிக்கப்படுவதாவது, பின்வரும் விசேட தீர்மானம் மேற்சொன்ன கம்பனியின் பங்குதாரர்களினால் 2018, மாச்சு மாதம் 13 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144(1) ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது.

*விசேட தீர்மானம் :* தன்னார்வ உறுப்பினர்கள் இணைப்பு

தன்னார்வ உறுப்பினர்களை இணைத்துக்கொள்வது என்ற விசேட தீர்மானத்தை கம்பனி நிறைவேற்றியுள்ளது. அத்துடன் 288, ராஜகிரிய வீதி, ராஜகிரிய எனும் முகவரியைச் சேர்ந்த திரு. உதித்த

ப்ரியங்க எகலாஹெவ என்பவரை கலைப்பலுவலராக நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(திருமதி ) எஸ். என். டி. பெர்னான்டோ,
கம்பனிச் செயலாளர்.
உப கூட்டுச்சங்கம் (பிறைவேட்) லிமிட்டட்.

இல. 34,
வாட் பிளேஸ்,
கொழும்பு 7.

3-1246/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர் :* டெக்ஸ்பா குளோத்திங் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல.:* பீவீ 130390
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.03.05
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 10/2, ஸ்டேஷன் ரோட், மொரட்டுவை

கம்பனி செயலாளர்.

3-1248

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* அமாரா சில்வா குருப் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இல.:* பீவீ 130333
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.03.02
*பதிவு முகவரி :* இல. 53/1பீ, இராமகிரிஷ்ண வீதி, கொழும்பு -6

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்,
அமாரா - சில்வா குருப் (பிறைவேட்) லிமிட்டட்.

3-1257

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சன்றைஸ் ஆர்கேட் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 78533
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2011.04.28
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* 197, பிரதான வீதி, கொழும்பு 11

3-1264

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சேனாநாயக்க ஹோல்டிங்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்:* பீவீ 129872
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.02.16
*பதிவு முகவரி :* அஸ்வெத்தும வத்தை, மரளுவாவ, குருநாகல்

3-1265

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* காயா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்:* பீவீ 130001
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.02.20
*பதிவு முகவரி :* இல. 76, ஸ்ரீ தர்மபால மாவத்தை, அஸ்கிரிய, கண்டி

3-1266

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஷ்ச்யா ஹெல்த்கெயா மஹியங்கன லிமிட்டட்
*பதிவிலக்கம்:* பீவீ 5448

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.27*
*பதிவு முகவரி : இல. 15, கசுன் பில்டிங், பஸ் நிலையம், மஹியங்கனை*

*3-1267*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-*

*கம்பனியின் பெயர் : மன்டிரா டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இலக்கம் : பீவீ 73789*
*திகதி : 2010, ஓகத்து 16*
*முகவரி : இல. 106- 5/3, 1 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 11*

*செயலாளர்.*

*3-1319*

---

## ரெடிவெர் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட், பீவீ 13359
## இறுதி கலைத்தல் கூட அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2)ஆம் பிரிவிற்கு அமைய கம்பனியின் பொதுக்கூட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு இல. 33, பார்க் ஸ்ட்ரீட், கொழும்பு 2 எனும் முகவரியில் கீழே காணப்படும் நோக்கங்களுக்காக நடைபெறும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படும்.*

*1. ஒழிப்போனின் நடவடிக்கை விவகாரங்கள், கலைத்தல் நடைமுறை மற்றும் கம்பனியின் ஆதனம் எவ்வாறு கை உறுதிப்பட்டது என்பதனைப் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ளவும் மற்றும் ஏற்றுக் கொள்ளவும்.*

*2. கம்பனியின் விவகாரங்கள் முழுமையாகவும் நியாயமாகவும் முடிவுறுத்தப்பட்டுள்ளது என தீர்மானிக்க.*

*3. தீர்மானத் திகதியிலிருந்து இந்த வருட காலப்பகுதிக்கு கம்பனியின் புத்தகங்களையும் ஆவணங்களையும் ஒழிப்போன் தனது பாதுகாப்பில் வைத்திருக்கவும் அதன் பின் அவரது தற்றுணிவிற்கு அமைய அகற்றி விடுவதற்கான அதி விசேட தீர்மானமொன்றை நிறைவேற்ற .*

*ஆர். வியுடன் கேட்டார,*
*கலைப்பலுவலர்,*

*277/14, நாவல அவென்யூ,*
*நாவலை,*
*2018, மாச்சு 14.*

*3- 1369*

---

## கேட் ஓஷன் (பிறைவேட்) லிமிட்டட்
## கம்பனி பதிவு இல. பீவீ 93397

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழ் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் : கேட் ஓஷன் (பிறைவேட்) லிமிட்டட் பதிவு செய்யப்பட்ட*
*அலுவலக முகவரி : இல. 183, குணசிறி மாகிமி மாவத்தை, மிரிஸ்ஸ*
*நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)*
*வழக்கு இல. :* HC ( CIVIL) 41 / 2015 / CO
*கம்பனி கலைப்பாளர் பெயர் :* G.J.*டேவிட்*
*முகவரி :* C/o SJMS Associates
Restructure & Corporate Recovery
Level 3, No.11, Castle Lane,
Colombo 4.
*நியமனத் திகதி : 2017.11.02*

*3- 1389/1*

---

## கேட் ஓஷன் (பிறைவேட்) லிமிட்டட்
## கம்பனி பதிவு இல. பீவீ 93397

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்* XII *இன் கீழான கம்பனி கலைப்பு அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் : கேட் ஓஷன் (பிறைவேட்) லிமிட்டட் பதிவு செய்யப்பட்ட*
*அலுவலக முகவரி : இல. 183, குணசிறி மாகிமி மாவத்தை, மிரிஸ்ஸ*
*நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)*
*வழக்கு இல. :* HC ( CIVIL) 41 / 2015 / CO
*நீதிமன்ற கட்டளைத் திகதி : 2017.11.02*
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி :2015.08.07*
*கம்பனி கலைப்பாளர் பெயர் :* G.J.*டேவிட்*
*முகவரி :* C/o SJMS Associates
Restructure & Corporate Recovery
Level 3, No.11, Castle Lane,
Colombo 4.

*3- 1389/2*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : டி என் இம்போர்ட்ஸ் என்ட் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*

*பதவி இலக்கம் : பீவී 129751*

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.12*

*பதிவு முகவரி : இல. 101 /எம், பங்களாவத்த, கொத்தலாவளை, கடுவெல*

கம்பனிச் செயலாளர்.

*3-1404*

---

## அறிவித்தல்

## UB பினான்ஸ் கம்பனி லிமிட்டட் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தின் உத்தேசிக்கப்பட்ட குறைப்பு

*2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட 59 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாகவும் கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 10(2) ஆம் உறுப்புரைக்கமைவாகவும் 2, 077, 129,688 சாதாரண வாக்குரிமை பங்குகளாலும் 217, 965, 341 சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளாலும் பிரதிநிதிப்படுத்தப்படும் கம்பனியின் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனமான 3,152, 047, 599 ரூபாவானது 2, 077, 129,688 சாதாரண வாக்குரிமை பங்குகளாலும் 217, 965, 347 சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளாலும் பிரதிநிதிப்படுத்தப்படும் 1, 028, 278, 810 ரூபாவாக குறைக்கப்படுமென இக்கம்பனியின் பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு UB பினான்ஸ் கம்பனி லிமிட்டட் ( கம்பனி) இன் பணிப்பாளர் சபையானது முன்மொழியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.*

*2017, மாச்சு 27 ஆந் திகதி HC( Civil) 60/ 2013/CO என்ற இலக்கமுடைய வழக்கில் மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதியை பரிசீலனை செய்த பின்னர் கம்பனியினால் வழங்கப்பட்ட சாதாரண வாக்குரிமை பங்குகள் மற்றும் சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு எவ்வித மாற்றத்தையும் செயற்படுத்தாமல், 2017, மாச்சு 31 ஆந் திகதியன்று பிடித்து வைக்கப்பட்ட நட்டமான ( கணக்காய்வு செய்யப்பட்ட) 2, 123, 774,789 ரூபாவை கம்பனியின் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்திற்கு எதிரீடு செய்வதன் மூலம் மேற்கூறப்பட்ட குறைப்பானது செயல்முறைப்படுத்தப்படும்.*

*உத்தேசிக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்பட்ட மூலதன குறைப்பிற்காக விஷேட முன்மொழிவொன்றின் மூலம் பங்குதாரர்களின் அனுமதியை பெறும் நோக்கத்துடன் 2018, யூன் மாதம் 8 ஆந் திகதி கம்பனியின் பங்குதாரர்களின் அதிவிஷேட பொதுக் கூட்டமொன்று நடைபெறும்.*

பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டட்,
UB பினான்ஸ் கம்பனி
லிமிட்டட்டின் செயலாளர்கள்.

இல. 3/17, கின்ஸி வீதி,
கொழும்பு 8.

*3- 1405*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : ஸ்டக்சரல் என்ட் என்வயரமன்டல் இன்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*

*கம்பனி இலக்கம் : பீவී 129333*

*கூட்டிணைப்புத் திகதி : 2018.01.29*

*பதிவு முகவரி : இல. 416/1, பெரேரா வீதி, கடுவெல*

*3-1411*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் நிறுவனம் கூட்டிணைப்பு செய்துள்ளமை தொடர்பான அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் : யுன் ஷியாஓ டெக்ஸ்டைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்*

*கம்பனி இலக்கம் : பீவී 129980*

*கூட்டிணைப்புத் திகதி : 2018, பெப்புருவரி 20*

*நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்டட முகவரி : இல. 48, தஹம் மாவத்தை, மஹரகம*

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

*3-1480*

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

*ரோம் தூதுவராலயத்தில் 2010.11.30 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் கொச்சிக்கடையில் வசிக்கும் தேவாலகம கம் ஆரச்சிகே தில்ருக்ஷி மஞ்சுளா மற்றும் காலுகே சுனந்த பிரனாந்து என்பவரினால் கொச்சிக்கடை, தளுவகொட்டுவ, பாதிமா தோட்டம் , இலக்கம் 69 இல் வசிக்கும் காளுகே புஷ்பா சாந்தனீ பிரனாந்து என்பவருக்கு வழங்கப்பட்ட அனைத்து அற்றோணி அதிகாரங்களும் இரத்துச் செய்யப்படுகின்றதென இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*இது 2010.12.10 ஆந் திகதி தினப்புத்தக இலக்கம் 10039 இன் கீழ் 42/58 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*3- 1200*

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 3, இனர் பிளவர் ரோட், 27 ஆம் ஒழுங்கை, இலக்கம் 26 இல் வதியும் பாணந்துறை லியனகே ஹேமசிறி ஆகிய நான், நிவ்யோர்க் நகரில் பிரசித்த நொத்தாரிசு சோ யங் ஜேங் அவர்களினால் கைச்சாத்திடப்பட்ட 2005, மே 27 ஆந் திகதி கொண்ட அற்றோணித்தத்துவம் கொழும்பு 5, இலக்கம் 263 , விஜய குமாரதுங்க மாவத்தை, பாணந்துறை லியனகே சூலசேன ஜினதாஸ அல்லது யாரேனும் அவரினால் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டவர்கள், அல்லது துணைவர்கள் மற்றும் கூறப்பட்ட பாணந்துறை லியனகே சூலசேன ஜினதாஸ அல்லது யாரேனும் ஒருவர் அவர் அற்றோணித்தத்துவதாரராக பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் கூறப்பட்ட ஆவணங்கள் இதன் பின்னர் இல்லாதொழிக்கப்பட்டு வெற்று வெறிதாக்கப் பட்டுள்ளதெனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 3, இனர் ப்ளவர் ரோட், 27 ஆம் ஒழுங்கை இலக்கம் 26 இல் அமைந்துள்ள சொத்துக்கள் தொடர்பாக எந்தவொரு நாட்டிலும் சட்ட ரீதியான தாக்கம் எதுவும் இல்லையெனவும் அறியத் தருகின்றேன்.

பீ. எல். ஹேமசிறி ஜினதாஸ.

2017.12.20

3-1202

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 158, ஜீ. எஸ். பெரேரா மாவத்தை, மாம்பே , பிலியந்தலை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தற்போது மார்க்ஸ்டேரேஸ் 7, 4512 பெலாக் சுவிட்சர்லாந்து எனும் இடத்தில் குடியிருக்கும் ஸ்ரீயா காந்தி பியசேன அல்லது ஸ்ரீயா காந்தி டோர்ஸ்ட் (676200622V) ஆகிய நான், 19 ஆவது மைல்கல் , ராஜா மாவத்தை, புத்தளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு எனும் இடத்தில் குடியிருக்கும் ஜயகொடிகே ரவிந்திர பிரியலால் ஜயகொடி (760620297V) என்பவருக்கு வழங்கப்பட்ட கொழும்பில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு ஏ. டீ. சுனேத்ரா பெரேரா அவர்களால் 2011.07.29 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டு, நாட்பதிவேட்டு இல. 4579 பொது அற்றோணிதத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் ரத்துச் செய்கின்றேன். இதன்பின் ஜயகொடிகே ரவிந்திர பிரியலால் ஜயகொடி மூலம் எனது சார்பாக புரியப்படும் ஏதேனும் செயல்களுக்கு மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் எதுவித பொறுப்பையும் வகிக்க மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் தருகின்றேன்.

ஸ்ரீயா காந்தி பியசேன அல்லது ஸ்ரீயா காந்தி டோர்ஸ்ட்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07.

3-1210

## விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று, 4 ஆம் குறிச்சி, இல. 256, முதலியார் வீதியைச் சேர்ந்த முகம்மது முகையதீன் றியாஸ்( தேசிய அடையாள அட்டை இல. 742920976V) மற்றும் முகம்மது முகையதீன் றியாட் ( தேசிய அடையாள அட்டை இல. 763572790V) ஆகிய எங்களால் கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று , 4 ஆம் குறிச்சி, இல. 256 , முதலியார் வீதியைச் சேர்ந்த முகம்மது முகையதீன் றிசாம் ( தேசிய அடையாள அட்டை இல. 702882907V) என்பவருக்கு கல்முனை பகிரங்க நொத்தாரிசு திரு. அப்துல் ஜப்பார் முகம்மது நஸீம் அவர்கள் மூலம் 1105 என இலக்கமிடப்பட்டு 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட பதிவாளர் நாயக அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி , 12 ஆம் தொடரிலக்கம் 19 ஆம் காண்டம் 84 ஆவது பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்வதாக இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

முகம்மது முகையதீன் றியாஸ் மற்றும்
முகம்மது முகையதீன் றியாட்.

3-1254

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கரவனெல்ல, கேகாலை வீதி, இலக்கம் 27 என்ற இடத்தில் வதியும், தே.அ.அ.இல. 561640412V ஐ உடைய ஒக்கத்தப்பொலகே சூலவங்ச நிமல்சிறி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திரு. வை. ஜி. பத்மசிறியினால் 2006.11.02. ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்திய 18337 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தினால் கரவனெல்ல, கோகாலை வீதி, இலக்கம் 27 என்ற இடத்தில் வசிக்கும் தே.அ.அ.இல. 661121860V ஐ உடைய ஒக்கத்தபொலகே பிரியந்த நிமல்சிறி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2018.03.12 முதற் கொண்டு இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

ஒக்கந்தப்பொலகே சூலவங்ச நிமல்சிறி .

3-1256

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாலசாரிகே சிரில் சொன்னதர ஆகிய நான், அம்பாந்தோட்டை, பிரசித்த நொத்தாரிசு திரு. எம். பி. சேரசிங்ஹ என்பவரினால் 2016.10.30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3819 ஆம் இலக்கமுடையதும் கென்னெலிய கம் அதிகே சுனிலா (தே.அ.அ.இல. 666410653 V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவம் உடனடியாக அமுல்படுத்தப்படும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றேன்.

அற்றோணிதாரர்.

3-1340

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

காலி, எல்லியட் வீதி, மஹிந்த மாவத்தை, இல. 05 எனும் முகவரியில் வசிக்கும், தே.அ.அ.இலக்கம் 486963930 V ஐ உடைய லேகம்வஸம் இந்திராணி அமரசிறி குணவர்தன ஆகிய என்னால் காலி, ஹியும்ஸ் வீதி, இல. 174/ 172 எனும் முகவரியில் வசிப்பவரான தே.அ.அ.இலக்கம் 661561637 V ஐ உடைய யஹுத்துகொட படல்கே பிரியந்த டி கொஸ்தா என்வருக்கு வழங்கப்பட்டதும் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆகிய காமினி மாஇட்டிபே என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டதும், இலக்கம் 3755 ஐ உடையதும் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆம் திகதியுடையதுமான விஷேட அற்றோணித்தத்துவத்தை இன்று முதல் உடனடியாக இரத்துச் செய்து மீளப்பெறுகிறேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இதன் பின் மேற் குறிப்பிட்டவரால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

லேகம்வஸம் இந்திராணி அமரசிறி குணவர்தன.

இல. 05,
மஹிந்த மாவத்தை,
எல்லியட் வீதி,
காலி.

3-1418

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்/ இல்லாதொழித்தல்

கண்டி, மாவில்மட, முதலாவது ஒழுங்கை, 73 ஆம் இலக்கத்திலுள்ள ஜயனெட்டி, கோறளலாகே துமிந்த ஜயனெட்டி (652741673V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) ஆகிய நான் 16/085 என்ற இலக்கத்தையும் 2016.02.29 ஆம் திகதியையுடையதும் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றின் பிரசித்த நொத்தாரிஸ் ஜெயென் லியன் ஓர்பெல் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பேராதனை, உட பேராதனை, 5 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தெல்வடன முதியான்செலாகே ஜி ஜே கே ஜயனெட்டி (715830469V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜயனெட்டி கோறளலாகே துமிந்த ஜயனெட்டி.

3-1121

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் இல. 252/1, உளுஅம்பளன் வத்தை வீதி, கிம்புளாப்பிட்டிய வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் வசிக்கும் ரஜகல்கொடகமகே தவளா சஜீவனீ ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. ஏ. இந்திக சந்தன அபேசிங்ஹ என்பவரினால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 539 ஆம் இலக்கமுடையதும் நீர்கொழும்பு கல்அமுண சிரிவர்தனாராமயவில் வசிக்கும் யட்டிஹென சத்தா லோக ஹிமி என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதென அறிவித்துக் கொள்கிறோம்.

ரஜகல்கொடகமகே தவளா சஜீவனீ.

3-1142

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் இல. 252/1, உளுஅம்பளன்வத்தை வீதி, கிம்புளாப்பிட்டிய வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் வசிக்கும் ரஜகல்கொடகமகே தவளா சஜீவனீ ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. ஏ. இந்திக சந்தன அபேசிங்ஹ என்பவரினால் 2014 நவம்பர் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 384 இலக்கமுடையதும் நீர்கொழும்பு கல்அமுண சிரிவர்தனாராமயவில் வசிக்கும் யட்டிஹென சத்தா லோக ஹிமி என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணி தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

ரஜகல்கொடகமகே தவளா சஜீவனீ.

3-1143

---

# ஏல விற்பனைகள்

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

**வெலிகம கப்பரதொட்ட 1 ஆம் ஒழுங்கை வரிப்பண இல. 4 இல் அமைந்துள்ள பெறுமதியான காணி**

**1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

தென் மகாணம் மாத்தறை மாவட்டம் வெலிகம நகரசபை எல்லை வெலிகம பிரதேச செயலாளர் பிரிவு வெல்லிவல மேற்கு கிராம அலுவலர் பிரிவு கப்பரதொட்டவில் அமைந்துள்ள மோலவத்த என்றழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆரியதாச அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2014.09.06ஆம் திகதியிடப்பட்ட 3120ஆம் இலக்கப்படத்தில் லொட் 8 என அடையாளமிடப்பட்ட காணி மற்றும் அதனகத்தே அமைந்துள்ள கட்டிடங்கள் பயிர்பச்சை ஆகிய அனைத்தும்.

அத்துடன் மேலே நன்கு விபரிக்கப்பட்ட காணித்துண்டில் உள்ள மின்சார வழங்கல் முறைமை உபகரணங்கள் , நீர் வழங்கல் முறைமை உபகரணம் ,தொலைத்தொடர்பு உபகரணம் மற்றும் வாயுசீராக்கி உள்ளடங்கலாக தற்போது பொருத்தப்பட்டுள்ள அல்லது இதன்பின் அல்லது காலத்துக்காலம் பொருத்தப்படவுள்ள அல்லது நிரந்தரமாக இணைக்கப்படவுள்ள அசையாப் பொறிகள், இயந்திரங்கள், உபகரணங்கள் , வளிபதனாக்கி அனைத்தும்.

சசிக எதிரிவீர மற்றும் பத்மசிறி எதிரிவீர (கடன்பட்டோர்) மற்றும் சசிகா எதிரிவீர (அடைமானம் வைத்தவர்) ஆகியோர் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனின் பொருட்டு அவ் வங்கி சார்பாக பிரசித்த நொத்தாரிசு (திருமதி பி. டீ அனுருத்திகா அவர்கள் 2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதியிட்டு எழுதி அத்தாட்சிப்படுத்திய 2576ஆம் இலக்க ஈட்டுமுறியின் வழங்கப்பட்ட அக் கடன் வசதியை மீளச் செலுத்தத் தவறிவிட்டனர். தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ ஆல் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய மேற்குறிப்பிட்ட ஆதனத்தை 2018, மே மாதம் 2 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு அவ்விடத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2017.12.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.12.18 ஆந்திகதிய " ஜலன்ட்", "திவயின", மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் வழி.**- வெலிகம பிரதான பஸ் நிலையத்திலிருந்து முதலியார் சமரவீர மாவத்தை ஊடாக 200 மீற்றர் செல்லவும் வலப்பக்கமுள்ள புதிய காலி வீதியை அடைந்து கும்பல்கம சந்தி வரை ஏறத்தாழ 3 கி.மீ. பயணிக்கவும் இடப்பக்கமுள்ள 1ஆம் ஒழுங்கையை சென்று சில மீற்றர்கள் சென்றதும் ஆதனத்தை அடையலாம். இவ் ஆதனம் குறித்த வீதியின் வலப்பக்கம் உள்ளது. இதன் வரிப்பண இல. 4, 1ஆம் ஒழுங்கை

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) விற்பனைவிலையின் 10% ;

(2) 1 % உள்ளூராட்சி சபைக்கட்டணம் மற்றும் பெறுமதிசேர் வரி ;

(3) 2.5% ஏலதாரரின் கட்டணம் ;

(4) விளம்பரத்துக்கான முழுச் செலவு ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 3,000;

(6) விற்பனை நிபந்தனைகளை பதிவு செய்வதற்காக ஒவ்வொரு விற்பனைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா7,500.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி முடித்தல் வேண்டும்.

**உறுதியைப் பார்வையிட மற்றும் மேலதிக விபரங்களுக்கு:** முகாமையாளர் -மையப்படுத்திய கடன்களை மீள அறவிடல், தேசிய அபிவிருத்தி வங்கி பீ. எல். சீ , இல.40, நவம் மாவத்தை, கொழும்பு02. தொலைபேசி : 011-2448448,011-7448448.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்
மதிப்பீட்டாளர் மற்றும் பட்டய
ஏலதாரர்.

இல.134,
பெத்தகான வீதி,
கோட்டே.

தொலைபேசி இல. : 011-2873656, 0777- 672082.
தொலை நகல் இல. : 011-2871184.

3-1298

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

மில்மன் ஹோல்டிங்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கணக்கு இல. 0072 1000 2205

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ. எ. ல். சீ பணிப்பாளர் சபையினால் 2017.12.18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டதீர்மானத்திற்கு அமைவாக 2018.03.16ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2018.03.02ஆந் திகதிய "திவயின (Divaina)" "ஜலண்ட் (Island)" " தினக்குரல் (Thinakkural)" ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே ஏழு லட்சத்து ஐம்பத்தி ஓராயிரத்து அறுநூற்று முப்பத்தி ஆறு ரூபா இரண்டு சதம் (ரூபா. 2,07,51,636.02) 2017 நவெம்பர் 14 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத்தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எண்பத்தி ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா. 18,750,000) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) (Floor rate of 11% per annum) கட்டணத்திற்காக வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ.டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி பி.ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபட பத்துவின் ஹிக்கடுவை நகர சபை எல்லைகளுக்குள் ஹிக்கடுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெள்ளவத்தை கிராம அலுவலர் பிரிவின்

வெள்ளவத்தையில் அமைந்த '' கந்துரே ஒவிலான'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். புத்ததாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒற்றோபர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2154 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு: லொட் A1; கிழக்கிற்கு: இல. 1679 எனும் வரைப்படத்தின் லொட் 5; தெற்கிற்கு: ஆறு; மற்றும் மேற்கிற்கு: மொலப்பு ஒய ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி எட்டு தசம் ஐந்து பேர்ச்கள் (0ஏ. 0றூ. 28.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2154 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும். இல. 1679 ஐ ஏற்ற கூறப்பட்ட லொட் 5 என குறிப்பிடப்பட்ட காணி துண்டுகளின் மீதும் ஊடாகவும் அதன் அடியிலும் பிரவேசப் பாதையில் பிரவேசிப்பதற்கான உரிமைகளுடனானது.

கூறப்பட்ட லொட் A2 வரைப்பட இல. 2011 இன் லொட் A இன் மீள் அளவீடும் மற்றும் உபபிரிவான மற்றும் மற்றொருவிதத்தில் இல. 1679 இன் லொட் 3 இன் மீள் அளவீடாகும். ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் உப பிரிவுமான வரைப்பட இல. 1626 இன் கூறப்பட்ட லொட் 4 மற்றொருவிதத்தில் வரைப்பட இல. 1626 இன் கூறப்பட்ட லொட் 4, வரைப்பட இல. 1679 இன் கூறப்பட்ட லொட் 4 இன் மீள் அளவீடுமாகும் . அத்துடன் அவை கீழே காட்டப்பட்டுள்ளது.

கூறப்பட்ட வெள்ளவத்தையில் அமைந்த '' கந்துரே ஒவிலான'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ கால்லகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, ஒற்றோபர் 13 மற்றும் 1989, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1679 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு: லொட் 3; கிழக்கிற்கு: லொட் 5 (வீதிக்கான ஒதுக்கம்); தெற்கிற்கு: ஆறு மற்றும் அக துடுவே வத்த எனும் திசாவெ வத்த; மற்றும் மேற்கிற்கு: மொலப்பு ஒய, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்கள் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கன் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1679 எனும் வரைப்படத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C790/272 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட வெள்ளவத்தையில் அமைந்த ''கந்துரே ஒவிலான'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ கால்லகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989 ஒற்றோபர் 13ஆந் திகதியிடப்பட்ட இல. 1679 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு: லொட் 2; கிழக்கிற்கு : லொட் 5 (வீதிக்கான ஒதுக்கம்); தெற்கிற்கு: லொட் 4; மற்றும் மேற்கிற்கு: மொலப்பு ஒய மற்றும் அக துடுவே வத்த எனும் திசாவெ வத்த, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்கள் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1679 எனும் வரைப்படத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L01/104 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-1346

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.72349179

A.P.S. பாம் தல்கஹபிட்டிய , பிங்கிரிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹெட்டிஆரச்சிகே அமில பிரதீப் சாகர பெரேரா அல்லது திரு. ஹெட்டிஆரச்சிலாகே அமில பிரதீப் சாகர பெரேரா ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.03. 20ஆந் திகதிய 1907 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.03.09 ஆந் திகதிய ''தினமின'' ,''தினகரன்'',''டெய்லி நியூஸ்''ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.33, தல்கொடபிட்டிய மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. H.W. அசோகா ஜயலால் 2018.05.25 ஆந்திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று கினியம கோரளையில் பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் தல்கஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் பிங்கிரியவில் அமைந்த ''பரணவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் M.M.P.D. பெரேரா தயாரித்த 1989.10.07 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 263 இல் விபரித்த துண்டு 03, 04, என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 263 இல் துண்டு 02 உம்; கிழக்கில்: துண்டு 05 றோட்டும், எரிக்சூரியசேன உரிமை கோரும் காணியும் ; தெற்கில்: எரிக் சூரியசேன உரிமை கோரும் காணியும்; மேற்கில்: அன்றனி பெர்ணான்டோ உரிமை

கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இரண்டு றூட் மூன்று தசம் இரண்டு பேர்ச்சு( 1ஏ.2றூ.3.2பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதுமாகும். இது குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் M 125/236 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்கில் உள்ளது.

*இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

திரு. R.P.R.S. ரத்நாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிங்கிரிய.

3- 1428

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(இரத்தினபுரி கிளை)

வாடிக்கையாளரின் பெயர்: அஸ்ஸரப்புலிகே ரணில் சில்வா மற்றும் யக்தெஹிகே நில்கா நதினி ஜயசிறி

24.01.2018 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-

"கடப்பாடுடையவரான அஸ்ஸரப்புலிகே ரணில் சில்வா மற்றும் ஈடுவைத்தவரான யக்தெஹிகே நில்கா நதினி ஜயசிறி ஆகியோர், வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என முன்னர் அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யு.எஸ்.எம்.சீ. சிறிமேவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 08.10.2015 திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 9919 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்களாதலாலும்;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி ப.வ.க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 9919 இன் மூலம் 05.01.2018 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை முப்பத்து நான்கு இலட்சத்து அறுபத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றிரண்டு ரூபா எட்டு சதம் (ரூபா 34,69,792.08) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபது சதவீத (20%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது முப்பத்தாறு இலட்சத்து நான்காயிரத்து எண்பத்தொரு ரூபா ஏழு சதம் (ரூபா 36,04,081.07) கொண்ட தொகை மற்றும் 04.01.2018ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட தொகை முப்பத்தாறு இலட்சத்து நான்காயிரத்து எண்பத்தொரு ரூபா ஏழு சதம் (ரூபா 36,04,081.07) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதிவரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 9919 இன்மூலம் அஸ்ஸரப்புலிகே ரணில் சில்வா மற்றும் ஈடுவைத்தவரான யக்தெஹிகே நில்கா நதினி ஜயசிறி ஆகியோரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி மாவில்மடை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ.டபிள்யு. ஜயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிற தென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணி பதிவுப் பிரிவிற்குள், பிட்டிகல் கோறளை வடக்கு, முன்னேஸ்வரம் பற்று, சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் சிலாபம் பிரதேச சபை எல்லைகளுக்குள், முன்னேஸ்வரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, கஞ்சிக்குளி கிராமத்தில் அமைந்துள்ளதும் "களவனவத்தை" என அழைக்கப்படும் அரச காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.எம்.பீ டன்ஸரன் பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 05.09.2007 ஆம் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5291 இல் துண்டு 01 என குறிப்பிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து.

சொல்லப்பட்ட துண்டு 01 இன் எல்லைகளாவன: வடக்கு: வரைபடம் இல. பீ.பீ.பு. 2318 இல் காணி 32 மற்றும் (இத்துண்டுகளுக்கு இட்டுச்செல்லும் பொது வழிகள்); கிழக்கு: மேற்சொல்லப்பட்ட வரைபடம் இல. 5291 இல் துண்டு 2; தெற்கு: வரைபடம் இல. பீ.பீ.பு. 2318 இல் துண்டு 44; மேற்கு: வரைபடம் இல. பீ.பீ.பு. 2318 இல் துண்டு 37. இது, ஒரு றூட் (0ஏ. 1றூ. 00பே.) அல்லது ஹெக்டயார் தசம் ஒன்று சைவர் ஒன்று இரண்டு (0.1012 ஹெக்டயார்) விஸ்தீரணமுடையது; சிலாபம் காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ හලා 09/55 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட வரைபடம் இல. 5291 இல் குறிப்பிடப்பட்ட எல்லா வழிகளின் வழியேயும் மீதுமான வழிகள் உரிமையுடன் சேர்த்து

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர்-அறவீடுகள்.

3-1414

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.